REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 ஜனவரி 12 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 89 இல. 10 | January 12, Tuesday, 2021 | 16 பக்கங்கள் | 30/-

அதிசிறந்த
anytime data
பக்கேஜ்கள் 4G போனஸ் சகிதம்
செயற்படுத்துவதற்கு #170# ஐ டயல் செய்யுங்கள்
முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே.
www.mobitel.lk/any-time-data
4G LTE
SLTMOBITEL

## பாரிய சவால்களுக்கு மத்தியிலேயே பாடசாலைகள் நேற்று மீள ஆரம்பம்

### சுகாதார நிலைமைகள் பூரண கட்டுப்பாட்டில்

### கல்வியமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாரிய சவால்களுக்கு மத்தியிலேயே முழுமையான சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பாடசாலைகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் தவிர்ந்த நாட்டின் அனைத்து பாடசாலைகளும் நேற்றைய தினம் இரண்டாம் வகுப்பு முதல் 13 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் நேற்று தெரிவித்த கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ்;

சுகாதார நிலைமைகள்

06

## 'பயங்கரவாதிகளை நினைவு கூருவதை அனுமதிக்கக் கூடாது

### அமைச்சர் சரத் வீரசேகர



யாழ்.பல்கலைக்கழகம் தனியொரு சமூகத்தின் சொத்தல்ல என்று கூறியிருக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, அப்பாவிப் பொதுமக்களை நினைவுகூரும் போர்வையில் தடைசெய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்த

06



இலங்கைக்கான பங்களாதேஷ் புதிய உயர்ஸ்தானிகர் தாரிக் மொஹமட் ஆரிபுல் இஸ்லாம் (Tareq Md. Ariful Islam) நேற்று (11) ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து நியமனக் கடிதத்தை கையளித்தபின் உரையாடுவதை படத்தில் காண்க..

### ஹக்கீம், வாசுதேவ, தயாசிறி எம்.பிக்கு

## பாராளுமன்ற

## உருவாக வாய்





### பணியாளர்கள் சகலருக்கும் அன்டிஜன பரிசோதனை நடதத முடிவு

**ஷம்ஸ் பாஹிம்**

பாராளுமன்றத்தில் கொரோனா கொத்தணியொன்று உருவாக வாய்ப்பு கிடையாதென பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பர்னாண்டோ நேற்றுத் தெரிவித்தார். அத்துடன் பாராளுமன்றத்தினூடாக கொரோனா பரவுவதை தடுக்க சகல முன் னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் படைக்கள சேவிதர் நரேந்திர பர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

இதுவரை மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொரோனா தொற்றியுள்ள நிலையில் அவர்களுடன்

06





### மேலும் 10 உறுப்பினர்கள் அடையாளம்

கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ள அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுடன் தொடர்பைப் பேணிய 10 பேர் முதல் தொகுதி தொடர்பாளர்களாக அடையாளம் காணப்பட்டிருப்பதாக பாராளுமன்றத்தின் படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சகலருக்கும், அவர்களுடன் தொடர்புபட்ட பிரிவுகளுக்கும்

06

## புலிகளை நினைவுகூரும் தூபிகளை கூண்டோடு அழிக்க வேண்டும்

### யாழ்.பல்கலை VC யின் தற்துணிவுக்கு விமல் பாராட்டு



மரணித்த விடுதலைப்புலிகளை நினைவுத் தூபிகள் அமைத்தோ அல்லது பகிரங்க நிகழ்வுகள் நடத்தியோ நினைவேந்தல் நடத்துவது நாட்டின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெரும் குற்றமாகும்.

எனவே, விடுதலைப்புலிகளை நினைவேந்தும் தூபிகள் வடக்கில் எங்கெல்லாம் இருக்கின்றதோ அவற்றை முழுமையாக இடித்தழிக்க வேண்டுமென அமைச்சர் விமல் வீரவன்ச

06

### கொரோனா மரபணுவில் மாற்றம்

## இலங்கையில் நோய்த் தாக்கம் வேகமாக பரவும் ஆபத்து

### GMOA சங்க வைத்தியர் ஹரித எச்சரிக்கை



மேல் மாகாணத்தில் தீவிரமாக பரவிய கொரோனா வைரஸ் தொற்று, வேறு பகுதிகளிலும் வேகமாக பரவ ஆரம்பித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு பரவும் வைரஸின் மரபணுவில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார். தற்போது கிடைத்துள்ள தகவலுக்கமைய மேல் மாகாணத்திற்கு வெளியே பரவல் 50 வீதத்துக்கும் அதிகமென

06



### யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் தகர்க்கப்பட்ட

## முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி மீண்டும் அதே இடத்தில் நிறுவப்படும்



நேற்று அதிகாலை அடிக்கல் நாட்டிய துணைவேந்தர் உறுதி

### யாழ்.பல்கலை முள்ளிவாய்க்கால் தூபி அழிப்பு;

## முழுமையாக முடங்கியது வடக்கு – கிழக்கு மாகாணம்

### கடைகள் பூட்டு; வாகன போக்குவரத்து இல்லை

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்து அழிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் வடக்கு கிழக்கில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அனைத்து தமிழ் கட்சிகள், மாணவர் ஒன்றியம் மற்றும் பொது அமைப்புகளால் கதவடைப்பு போராட்டத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. மேலும் இக் கதவடைப்பு போராட்டத்திற்கு வடக்கு, கிழக்கு மக்களும் தமது பூரண ஆதரவை வழங்கினர்.

அதற்கமைய

06



## சுகாதார வழிகாட்டல்கள்